கரி வருவதற்கு எவ்வளவுதான் நீங்கள் முயற்சித்தாலும் எவ்வளவு கப்பல்கள் வாங்கினாலும், தூத்துக்குடி ஓரத்திலே கரியை இறக்கி அது ஒழுங்கான நேரத்திலே போய்ச் சேராது. 3 பிளாண்டுகளும் ஒரே நேரத்தில் வேலை செய்யாது. எனவே தமிழகத்தில் ஒன்றிரண்டு அணு மின் நிலையங்களுக்காவது ஏற்பாடுகள் நீங்கள் அவசியமாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பாக வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

வறுமைக்கோடு என்று சொல்லப்படுவது தமிழகத்திலே தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பார்த்தால், 48—லிருந்து 57.2 ஆக ஏறியிருக்கிறது. எத்தனை திட்டங்கள் போடப் பட்டது. எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? எத்தனை அரசாங்கங்கள் வந்துவிட்டன. நீங்களும் ஆட்சிக்கு வந்து 7 ஆண்டுகள் ஆகிவிட்டன. வறுமைக் கோட்டின் அளவு இன்னும் குறையவில்லை. ஏன் என்று சொன்னால் நாம் போடுகின்ற திட்டங்கள் அப்படியிருக்கின்றன. நாம் எவ்வளவு தான் திட்டங்கள் போட்டாலும் கூட அது எந்தப் பொது ஜனங்களுக்குப் போய்ச் சேரவேண்டுமோ, அந்த ஜனங்களுக்குப் போய்ச் சேராததின் காரணமாக வறுமைக்கோடு இன்றைக்கு வளர்ந்துகொண்டே போகிறது. வறுமைக் கோட்டைப்பற்றி அன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள்? அதைப்பற்றி மத்திய அரசாங்கத்தை போய்க் கேளுங்கள் என்று எனது கேள்விக்கு பதில் சொன்னார்கள். அவருக்கு ஞாபகம் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு வறுமைக்கோடு வளர்ந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம்? இதற்கு யார் தடங்கலாக இருக்கிறார்கள்? அதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு உங்களுக்கு என்ன தடை இருக்கிறது? என்பதைத்தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வறுமைக்கோட்டிற்க்காக, அதை குறைக்க வேண்டும் என்பதற்காக எத்தனை சட்டங்கள் போட்டாலும், அதை சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால், அது குறையாது, இந்தத் தமிழகம்முன்னேறுவதிலே மிகப் பெரிய சிக்கலாக இருக்கும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20.2.1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6—41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

(79) 1979-80 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகளின் தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) [தமிழ்நாடு] 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (அ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

(80) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்)] 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

(81) 1982—83 ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் பதினோறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்—
ஏதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS